Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 3 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 27 ஞாயிற்றுக்கிழமை (12-09-1993) UTHAYAN—A lively National Tamil Daily இதழ் 288

# ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கோஷ்டிப் பூசல் வலுக்கிறது

## ரணிலின் செல்வாக்கை உடைக்க திரைமறைவில் தீவிரமான முயற்சி

கொழும்பு, செப்டெம்பர் 12

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் என்றும் இல்லாதவாறு கோஷ்டிப் பூசல் வலுத்து வருவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். அதே சமயம் கட்சிக்குள் வேகமாக முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் செல்வாக்கை உடைத்து விடுவதற்கு திரை மறைவில் தீவிரமாக முயற்சிகள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

ஐ. தே. கட்சிக்குள் கோஷ்டிகள் இருந்த போதிலும், பகிரங்கமாக எவரும் அணி சேர்த்து செயற்பட பின்னடித்து வருகின்றனர் என்று சொல்லப்படுகிறது.

எனினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் வெளிப்படையாக ஆதரவு தெரிவித்து வருகின்றன. ரணிலும் தமது செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள பல்வேறு வழிகளிலும் முயற்சி எடுத்து வருகிறார். பாமர மக்களின் ஆதரவைத் தேடிக் கொள்வதிலும் அவர் அதீத அக்கறை காட்டி வருகிறார்.

இதற்கு ஏதுவாக, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் பாணியில் அவர் செயற்பட முனைவதாகவும் கூறப்படுகிறது. பிரேமாவின் திட்டங்களுக்கு புத்துயிர் கொடுப்பதிலும் பிரதமர் ஆர்வம் காட்டி

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பிரபா தலைமைக்கு தொண்டா பாராட்டு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன், ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்துவதன் மூலம் தமிழர்கள் அனைவரும் பெருமைப்படும் விதத்தில் நடந்துகொள்கிறார்.

அமைச்சர் தொண்டமான் முன்கண்டவாறு கூறியுள்ளார்.

உலகத் தமிழர் இயக்கத் தொலைக்காட்சியில் இருந்து ஒலிபரப்பப்படும் "தமிழ் சோலை" வானொலிக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"— இத்தகைய ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்துவது ஒரு சாதாரண விடயமல்ல. விடுதலைப் புலிகள் போராட்டம் நடத்துவதில் மட்டுமல்ல பேச்சுவார்த்தை நடத்துவதிலும் திறமை வாய்ந்தவர்கள்"—

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ 5)

## பயங்கரவாதப் பிரச்சினை என்ற ஜனாதிபதி கூற்றுக்கு கூட்டணி கண்டனம்

கொழும்பு, செப். 12

"வடக்கு - கிழக்கில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல; அங்கு நடப்பது பயங்கரவாதப் பிரச்சினையே" என்று அண்மையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்த கூற்றுக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணி கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கூட்டணியின் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் மற்றும் திரு. ஆர். சம்பந்தன் ஆகிய இருவரும் ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

ஜனாதிபதியின் மேற்கண்ட கூற்று தவறானது இனப்பிரச்சினை விடயத்தில் தீர்வு காணுவதில் அவரிடம் உறுதி ஏதும் இல்லை என்பதை அவரது கூற்று வெளிப்படுத்துகிறது.

ஐ. தே. கவின் 1977 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட இனப்பிரச்சினை என்ற விடயம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது

— இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ 6)

## தமிழர் மீதான அடக்குமுறை: ஜேர்மனியில் கண்டன பேரணி

யாழ்ப்பாணம், செப். 12

தமிழ் மக்கள் மீதான அரசின் பல்வேறு அடக்கு முறைகளைக் கண்டித்து ஜேர்மனியின் மொரன்சென் நகரில் கடந்த 6 ஆம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

உலகத் தமிழர் இயக்கத்தின் ஜேர்மன் கிளையினர் அந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

சுலோகங்களைக் கொண்ட அட்டைகளைத் தாங்கியபடி பல நூற்றுக்கணக்கான மக்கள் ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

கிளாலி படுகொலைகளை நிறுத்தி பூநகரி பாதையை போக்குவரத்துக்கு திறக்குமாறும், மக்கள் மீதான விமானக் குண்டு வீச்சை நிறுத்துமாறும் கோரும் சுலோகங்களும் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன. (இ-5)

## போதனா வைத்திய சாலைக்கான பிரிட்டிஷ் உபகரணங்களில் ஒரு தொகுதி வந்து சேரலாம்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கென பிரிட்டிஷ் அரசாங்கம் அன்பளிப்பாக வழங்கிய 15 கோடி ரூபா பெறுமதி வாய்ந்த மருத்துவ உபகரணங்களில் ஒரு தொகுதியை வடக்குக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை யாழ். போதனா வைத்தியசாலையின் உயரதிகாரிகள் கொழும்பில் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த உபகரணங்களில் ஒரு தொகுதியை மட்டும் முதலில் வட பகுதிக்கு கொண்டு செல்வதற்கு சுகாதார மகளிர் விவகார அமைச்சு யாழ் போதனா வைத்தியசாலை உயரதிகாரிக்கு அனுமதி வழங்கி உள்ளது.

இந்த உபகரணங்களை வட பகுதிக்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லும் குமண கப்பலில் அனுப்பி வைப்பதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ 17)

## அரச காணிகளில் வசிக்கும் தமிழரை அகற்ற முயற்சி

கொழும்பு, செப். 12

ஊவா மாகாணத்தில் அரச காணிகளில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பசறை, அக்கரதன்னை, பசறை 13 ஆம் கட்டை, கோணகலை ஆகிய பகுதிகளில் அரச காணிகளில் வசிக்கும் தமிழர்களை வெளியேற்ற அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இது தொடர்பாக பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி. வி. சென்னன் ஜனாதிபதிக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## புதுடில்லியில் குண்டு வெடிப்பு! 12 பேர் பலி!! 50 பேர் காயம்!!!

### இளைஞர் காங்கிரஸ் அலுவலகம் முன் சம்பவம் சீக்கியப் பிரமுகர் மயிரிழையில் தப்பினார்

புதுடில்லியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இளைஞர் காங்கிரஸ் அலுவலகக் கட்டடத்திற்கு முன்னால் — நாடாளுமன்ற கட்டடத்திற்குச் சமீபமாக — சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டனர். 50 பேர் காயமடைந்தனர்.

ரைசினா வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கார்கள், பஸ்கள், மற்றும் ஸ்கூட்டர்கள் உட்பட 15க்கும் மேற்பட்ட வாகனங்கள் பலத்த சேதமடைந்தன. ஏராளமான சைக்கிள்களும் சுக்குநூறாகின.

இளைஞர் காங்கிரஸ் முன்னணியின் தலைவரான மணிந்தர்ஜித் பிட்டா சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பி விட்டார். அவருக்குப் பாதுகாப்பாக சென்ற கமாண்டோக்கள் இருவர் உயிரிழந்துவிட்டனர்.

சீக்கிய இனத்தைச் சேர்ந்தவரான பிட்டாவை இலக்கு வைத்தே சீக்கியத் தீவிரவாதிகள் இந்தக் குண்டுவெடிப்பை நடத்தியுள்ளனர் ... தீவிரவாதிகளின் கொலை முயற்சியில் இருந்து பிட்டா ஏற்கனவே பதினொரு தடவைகள் தப்பியுள்ளார் என்றும் சொல்லப்படுகிறது.

பிட்டா அவரது மெய்ப்பாதுகாவலர்களுடன் இளைஞர் காங்கிரஸ் அலுவலகத்திலிருந்து வெளியே வந்த சமயமே பயங்கரச் சத்தத்துடன் குண்டு வெடித்ததாகக் கூறப்பட்டது.

"ரிமோட் கொன்றோல்" மூலம் குண்டுவெடிக்க வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. குண்டு வெடித்த சத்தம் சுமார் 6 கிலோ மீட்டர் வரை கேட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்பின் அதிர்வினால் அருகில் இருந்த ஜவஹர் பவன் கட்டடம், ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் போன்ற கட்டடங்களின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து தூள்தூளாகின என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கானை இளங்கதிர் இளைஞர் விளையாட்டுக்கழக வளர்ச்சி நிதிக்காக 10-09-93 அன்று குலுக்கிய

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

| 1ஆம் பரிசு: | 2ஆம் பரிசு: | 3ஆம் பரிசு: |
| --- | --- | --- |
| 1694 | 2126 | 3909 |

ஆறுதல் பரிசில்கள்:

இல: 4058 இல: 4102 இல: 2150
இல: 893 இல: 4554

(6651) — கழக நிர்வாகம்



"சுதேசி கூடம்"

## A/L REVISION PAPER CLASS

மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்

CHEMISTRY — திரு. சிவசோதி
PHYSICS — திரு. ஜெயதாசன்
BOTANY — திரு. சிவவீரசிங்கம்
ZOOLOGY — திரு. செல்வநாயகம்
PURE & APP — திரு. முருகையா

ஆரம்பம்:- 18 - 09 - 1993

BOND கல்வி நிறுவனம்
58 A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(27282)



## பாஷாண உத்வாசனமும் சபிண்டீகரணமும் 16 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 05 - 11 - 1926 — மறைவு 28 - 08 - 1993



திருமதி
### வேலும்மயிலும் தில்லைநாயகி

அன்பும் பண்பும் ஊட்டி வளர்த்த எம் அன்புத் தெய்வமே
ஆழ்கடல் தாண்டி வேற்நாடுதனில் எமை சிறப்புற வாழவைத்தீர்களே
இனிய வாழ்வையும் எம்மிளம் பிஞ்சுகளின் மழலையும் கேட்க
ஈழ மண்ணில் இருந்து பறந்து வருவீர்களென எதிர்பார்த்திருந்தவேளை
உடனிருந்த பிள்ளைகளையும் உறவினரையும் மறந்து போனீரோ
ஊர் விட்டு ஊர் போக உமைபாகனும் விடைதர மறுத்தனனோ
எமைப் பார்க்க ஆவல் கொண்ட வேளைதனில் எமனும்
ஏதென்று அறியாதொரு நோயென்ற உருவினில் வந்தனனோ
ஐயமில்லையம்மா! நீவீர் காட்டிய பாதையில் யாம் பயணிப்போம் - ஆனால்
ஒன்றுமறியாப் பிஞ்சுகளுக்கு ஏது சொல்வோம் எப்படி தேற்றுவோம்
ஓ! என்று அழுவதைத் தவிர வேறு யாதுமறியோம்.
தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

இன்று எம்மில்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

உருத்திரன் சகுந்தலாதேவி குடும்பத்தினர் (கனடா)
குலேந்திரநாயகம் உருத்திராணி ,,
யோகேஸ்வரன் சித்திரா ,, (கனடா)
புவனேஸ்வரன் கிரிசாந்தினி ,, (பிரான்ஸ்)
பாஸ்கரமகாராஜா விமலிராணி ,,
லோகராஜா வசந்தராணி ,, (கனடா)
சந்தேஸ்வரன் பிரதீபா ,, (கனடா)

"ருத்திர பவனம்",
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
(27281)


# தென்னிலங்கை செய்தியாளர்களை யாழ். கூட்டிவர நடுநிலையம் திட்டம்

யாழ்ப்பாணம், செப். 12
யாழ். மாவட்ட மக்களின் நிலை, அவர்களின் எதிர்பார்ப்பு போன்ற விடயங்களை தென் இலங்கை மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் தெரியப்படுத்தும் வகையில் செயல் திட்டம் ஒன்றை சமூக பொருளாதார முன்னேற்ற நடுநிலையம் செயல்படுத்தவிருக்கிறது.

இதன் முதல் கட்டமாக தென் இலங்கை, சர்வதேச செய்தி நிறுவனங்களின் 10 செய்தியாளர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வர அந்த அமைப்பு ஏற்பாடுகளை செய்து வருகிறது.

விடுதலைப் புலிகளின் அனுமதியைப்பெற்று இவர்களை இங்கு அழைத்து வரப்பட விருப்பதாக அந்த அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து தென். இலங்கை பல்கலைக்கழக மாணவர்கள், புத்திஜீவிகள் அழைத்துவரப்படவிருக்கின்றனர்.

இந்த செயல் திட்டம் மூலம் தமிழ் - சிங்கள மக்களிடையே பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்த முடியும் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (த-3)

## 83 ஜூலை இனக்கலவரத்தின் போது
# பௌத்த மதக் கும்பல்கள் தமிழரை உயிருடன் எரித்தன
## ஜே. ஆர். தெரிவித்தாராம்

கொழும்பு, செப். 12
1983 ஜூலை இனக்கலவர காலத்தில் கொழும்பு மாநகரில் பௌத்த மதக் கும்பல்கள் தமிழர்களை உயிருடன் நெருப்பில் தூக்கி வீசினார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

இந்தியாவில் அமெரிக்கத் தூதராகப் பணிபுரிந்தவரும் ஹவார்ட் பல்கலைக் கழகப் பேராசிரியருமான திரு. டானியல் பட்ரிக் மொய்னிஹன் தாம் எழுதிய 'கலேபரம்' (pandemonium) என்ற நூலில் மேற்கண்டவாறு தகவலை வெளியிட்டிருக்கிறார்.

ஜெயவர்த்தனாவின் இத்தக் கூற்று கொழும்பு பௌத்த அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்திரா காந்தியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள 1984இல் ஜெயவர்தனா புதுடில்லி சென்றிருந்தார். அப்போது திரு. மொய்னிஹனி அவரைச் சந்தித்தார். அப்போது ஜெயவர்த்தனா தம்மிடம் முன் கண்டவாறு கூறியதாக நூலாசிரியர் தெரிவித்துள்ளார்.

— திரு. மொய்னிஹன் கூறியுள்ளது உண்மை எனில் திரு. ஜெயவர்த்தனா தாம் கூறியது சரியானது (பௌத்த மதக் கும்பல்கள் தமிழர்களை உயிருடன் நெருப்பில் எறிந்தன) என்று உறுதியுறுத்துவாரா?

— திரு. ஜெயவர்த்தனா இது குறித்து நாட்டு மக்களுக்கு விரைந்து விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் 'த ஐலண்ட்' நாளிதழ் கோரியுள்ளது. (த-எ)


## PERSONAL NEW SCIENCE CENTRE
Elilakam Front Lane
Jaffna

★ விலங்கியல் ★

R. ஈஸ்வரதாசன்
B. Sc (Cey) Dip. In. Ed

துரித மீட்டல்
வினா விடை வகுப்பு
(ஒவ்வொரு பகுதியாக)

ஆரம்பம்: 18_09_93
சனி
பிரிவு I - 10 A.M
Sat, Sun
பிரிவு II - 3 P.M
Sat, Sun
பிரிவு III-5 30 P.M
Tues, Thurs
(சி/5921)



## ENGLISH
G. C. E. O/L 93
அலகு ரீதியான வகுப்புகள் Spoken English- With Grammar மூன்று மாத பயிற்சி (உளவியல் ரீதியாக) சனி, ஞாயிறு காலை 7. 30 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

R. சிவலிங்கம்
(Dip. in Eng)
புதிய ஆங்கில
கல்வி நிலையம்
82, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/6094)



## O/L விஞ்ஞானம் PAPER CLASS

திரு. J. R. சூரி

ஆரம்பம்:-
14-09-93
செவ். பி. ப. 5.30
SHAMROCK
(27278)


## இன்று

வலிகாமம் மேற்கு விவசாயிகள் அடையாள அட்டைக்கான படப் பிடிப்பில் தங்கள் படங்களை எடுக்கத் தவறிய விவசாயிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக சங்கானை அலுவலகத்தில் படம் எடுக்கலாம் என அறியப்படுகிறது. (க-161)

o o o

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை உடுவில் பிரிவின் சுயதொழில் பயிற்சி நிலையம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய சந்தைக் கட்டிடத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி ரி சிங்கராசாவினால் திறந்து வைக்கப்படும். இவ்வேளை தையல் பொருட் காட்சியும் இடம்பெறும். (க 13)

o o o

அராலி மேற்கு நன் ஒளி சனசமூக நிலையம் நாளாந்த சேமிப்பு ஒன்றை இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 5 மணிக்கு நிலையத்தில் ஆரம்பிக்கவுள்ளது (க-161)

o o o

''பெண்களும் அபிவிருத்தியும்'' என்ற தலைப்பில் மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு ஒன்று பிற்பகல் 1.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பன்னாலை மகளிர் கிராம கட்டுவன் கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தவர்கள் மற்றும் அப்பகுதிசார் ஏனைய மகளிர் உள்ளடக்கிய 60 இளம் யுவதிகளை கொண்ட குழுவினருக்கு இக்கருத்தரங்கு நடத்தப்படுகின்றது. (த)

# மலரவனின் 'போர் உலா' நூல் வெளியீட்டு விழா

கப்டன் மலரவனின் போர் உலா நூல் வெளியீட்டு விழா நேற்று மாலை யாழ். பரியோவான் கல்லூரியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மாலை 4-30 மணிக்கு மலரவனின் தாயார் ஈகைச் சுடரேற்ற மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் இன்பன் தலைமையில் விழா ஆரம்பமானது. [illegible] மலரவனின் திருவுருவப் படத்தை திரை நீக்கம் செய்து வைத்தார்.

மாணவ மகளிர் அமைப்பு பொறுப்பாளர் வாசுகி வரவேற்பு உரையை நிகழ்த்த புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரையை நிகழ்த்தினார். தமிழீழ அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நூலை வெளியிட்டு வைத்தார்.

கோகிலா மகேந்திரன், சண்முகதாஸ், சோபா ஆகியோர் மதிப்புரை வழங்கினர். (இ-11-15)

## கட்டு நிதி வந்து சேரவில்லை

வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதிக்கு கடந்த இரண்டு மாதங்களாக கட்டு நிதி வந்து சேராததினால் இப்பகுதியைச் சேர்ந்த சுகாதார ஊழியர்களுக்கான சம்பள கொடுப்பனவுகளும் தாமதமடைந்துள்ளது.

திருகோணமலையில் உள்ள வடகிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இருந்தே இவர்களுக்கான கட்டு நிதி அனுப்பி வைக்கப்படுவதுகுறிப்பிடத்தக்கது. (த-162)

## நாளை

தேசிய பாடசாலைகளுக்கும் தனியார் பாடசாலைகளுக்கும் இடையிலான வருடாந்த ஆங்கில தின போட்டிகள் நாளை திங்கட்கிழமை காலை 8. 30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும். (த-152)

o o o

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மனைப் பொருளியல் கண்காட்சி நாளை திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் ஆரம்பமாகும்.

இக் கண்காட்சி விக்ரோறியாக் கல்லூரியில் 13 ஆம், 14 ஆம் திகதிகளிலும் யூனியன் கல்லூரியில் 16 ஆம், 17 ஆம் திகதிகளிலும் நடைபெறும். (க-161-152)


## கண்ணீர் அஞ்சலி

ஈச்சமோட்டையைச் சேர்ந்த மறைந்த
### ஆறுமுகம் கனகசபாபதி
அவர்களுக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

கொழும்புத்துறை மேற்கு,
இந்து இளைஞர் மன்றம்.
(27284)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க கோரும் இயக்கத்தை முன்னெடுத்தால் தமிழருக்கு லாபம்

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்ற குரல் சர்வதேச அரங்கில் பலமாக ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

ஜெனிவாவில் இவ்வருடம் பெப்ரவரி மாதம் ஐ நா. மனித உரிமை ஆணைக்குழுவின் நாற்பத்தொன்பதாவது மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் சர்வதேச ரீதியில் இயங்கும் பதினைந்து அரச சார்பற்ற நிறுவனங்கள், ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றின.

பாக்ஸ் கிறிஸ்ரி இன்ரநாஷனல், மக்களின் விடுதலைக்கும் உரிமைக்குமான சர்வதேசக் கழகம், சகல வகையான இனப்பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேசக் கழகம், சர்வதேசக் கல்வி அபிவிருத்தி நிறுவனம், உலகத் தொழில் சம்மேளனம் ஆகிய உலகப் பிரசித்தி பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் அவற்றில் அடங்கும்.

"இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அர்த்தமுள்ள முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படுவதாயின், பிரச்சினையின் அடிப்படைக் காரணங்களை இனங்காண வேண்டும். அத்தோடு, சிங்களப் பெரும்பான்மையினர், ஒற்றையாட்சி அரசின் கீழ் பல தசாப்தங்களாக தமிழர்கள் மீது ஆழமாகவும், அகன்ற இடைவெளியை உண்டுபண்ணும் வகையிலும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டதன் விளைவாகவே, தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் நோக்குடன் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்."

"ஸ்ரீலங்காவின் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்கள், தமது அரசியல் அந்தஸ்தை தாமே சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு உரிமை உடையவர்கள் என்பதனை சர்வதேச சமுதாயம் மிக அவசரமாக அங்கீகரிக்க வேண்டிய தேவை உள்ளது."— என்பது கடந்த பெப்ரவரியில் மனித உரிமை ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் சாராம்சம்.

இந்தத் தீர்மானத்தை அனுசரித்து ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு உலகத் தமிழர் சம்மேளனம் கடந்த ஜூலை மாதம் 24ஆம் திகதி பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரிடம் கேட்டிருந்தது.

**சூரியகாந்தி**
**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

ஆனால் பிரிட்டிஷ் பிரதமரின் பதில் திருப்திகரமானதாக அமையவில்லை. ஆக்கபூர்வமானதாகவும் இல்லை. இனப்பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தைக்கு உதவுவதற்கு தாமும், தமது ஐரோப்பிய நாடுகள் அணியும் எப்போதுமே தயாராக இருப்பதாக அவர் அறிவித்திருக்கிறார். பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டியது முற்தேவை என்பதனை பிரிட்டிஷ் பிரதமர் உணரத் தவறியது வருத்தத்துக்கு உரியது.

### பிணக்குகளின் அடிப்படைகளை உணரவேண்டும்

இலங்கையின் இனப்பிரச்சினையை சமரசமாக, சமாதானமாகத் தீர்த்துவைக்க விரும்பும் மூன்றாமவர் எவரும் (அது பிரிட்டனாக இருக்கலாம்; கனடா அல்லது அவுஸ்திரேலியா அல்லது ஐ. நா வாக இருக்கலாம்) தாம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இருசாராரும் உடன்பட்டு சமாதானமாக இருக்க வேண்டுமென்றே விரும்புகிறார்கள். இருசாராருக்கும் இடையிலான பிணக்குகளின் அடிப்படைகளை இல்லாதொழிப்பதிலேயே பிரச்சினைக்கான தீர்வின் வெற்றி தங்கியுள்ளது. இது மூன்றாமவர்களாக வந்து சமாதானம் செய்துவைக்க வருபவருக்குத் தெளிவாக உணர்த்தப்பட வேண்டும்.

## பிணக்கின் அடிப்படை அதுவேயன்றி போர்நிறுத்தமும் சமரசப் பேச்சுமல்ல

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து அவர்களை அடையாளமற்றவர்களாக்கி விடுவதற்காகவே, அரசாங்கம் திட்டமிட்டு யுத்தத்தை நடத்துகிறது. மறுபுறத்தில் தமிழர் தாயகத்தில் சிங்களவர்களைக் குடியேற்றி, இனவிகிதாசாரத்தை மாற்றி, இலங்கை முழுவதும் சிங்களவர் தாயகமே என்று நிலைநாட்ட முனைகிறது.

தமிழ் மக்களோ, தமது தாயகத்தில் தம்மைத் தாமே ஆண்டு சுதந்திரமாக வாழ வேண்டும் என்று விரும்புகிறார்கள். தாங்கள் இழந்த அரசையும் இறைமையையும் மீளவும் பெற்று மனிதனுக்குரிய — ஓர் இனத்துக்குரிய — இயற்கையான உரிமைகளுடன் வாழ வேண்டும் என்பதற்காகவே அவர்கள் போராடுகிறார்கள்.

இத்தகைய இரு துருவப்பட்ட, சிக்கல் நிறைந்த, பிணக்குகள் கொண்ட, இனப் பிரச்சினையை வெறுமனே யுத்தத்தை நிறுத்துவதாலும் சில சலுகைகள் அல்லது சிறு உரிமைகளை வழங்கி சமாதானத்தை உருவாக்குவதன் மூலமும் தீர்த்துவிட முடியாது.

### சுயநிர்ணய உரிமை

சிங்களவர்-தமிழர் பிணக்கின் அடிப்படையின் ஒரு பகுதியையேனும் இல்லாமற் செய்வதற்கு ஆகக் குறைந்தது தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டியது அவசியம். போரையே தனது உள்ளார்ந்தமான தீர்வாக வைத்துக் கொண்டு, வெளியில் சனநாயக, சமரச அரசியல் தீர்வு — பேச்சு — என்று வேடம் போட்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசோ, சிங்களவர்களோ தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை முதலில் சர்வதேச நாடுகள் அங்கீகரித்து, ஸ்ரீலங்கா அரசை அவ்வாறு செய்யுமாறு நெருக்குவதன் மூலமே இனப்பிரச்சினையின் அடிப்படைச் சிக்கலை நீக்க முடியும்.

ஆகையால் [illegible] தம், அரசியல் பேச்சு மூலம் தீர்வு — சமாதானம் என்ற நிலைப்பாட்டை உருவாக்குவதற்கு தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு உலக நாடுகளிடம் விண்ணப்பிக்க வேண்டும். வற்புறுத்த வேண்டும். ஆதரவு திரட்ட வேண்டும்.

இந்த வகையில் 1993 பெப்ரவரி ஐ நா. ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவது அவசியம்.

தமிழர்களின் தனித் தேசத்தை சிங்களவர் தேசத்துடன் சேர்த்து ஒற்றையாட்சியை உருவாக்கிய பிரிட்டன் இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். ஸ்ரீலங்கா அரசுக்கு ஆயுதம் விற்பதற்கு முண்டியடிக்கும் பிரிட்டன் தனக்குள்ள தார்மீகக் கடமையை மறந்துவிடக் கூடாது.

**அரசியல்**

### இன ஒழிப்புக்கு தண்டனை என்ன?

இலங்கையின் வடக்கு-கிழக்கில் ஸ்ரீலங்கா அரசாங்கம் நடத்தும் யுத்தம் தமிழர்களின் உரிமைப் போரை அடக்கும் ஒன்று மட்டுமல்ல தமிழர் இன ஒழிப்புக்கான யுத்தம் என்பதையும் உலக நாடுகளுக்கு உணர்த்த வேண்டும்.

கடந்த ஐம்பது வருட காலமாக தமிழர் இனச் சுத்திகரிப்பு முயற்சிகள் நடந்து வருகின்றன. 1958 இல் அது வெளிப்படையாக இன ஒழிப்பாகக் கிளம்பியது. 1983 இல் உண்மை வடிவம் எடுத்தது.

"சிங்களக் குண்டர்கள் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட வன்செயல்கள் பற்றிய சாட்சியங்கள், அவை இன ஒழிப்பு நடவடிக்கையே என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன" என்று— 1984ஆம் ஆண்டில் "இன்ரநாஷனல் ஜூரிஸ் கொமிஷன்" என்ற நீதியியல் அமைப்புக் கூறியது.

அது தமிழர் இன ஒழிப்பின் ஆரம்பம் என்றால் இப்போது வடக்கு-கிழக்கில் யுத்தம் மூலம் தமிழர்கள் இனச்சுத்திகரிப்புச் செய்யப்படுகிறார்கள். இது குறித்து உலகத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டிய தேவையுண்டு.

ஐ. நா. சபையினால் 1948 இல் இன ஒழிப்புக்கான தண்டனையும் தடுத்தலும் என்ற சாசனம் உருவாக்கப்பட்டு 1951முதல் நடைமுறைக்கு வந்தது. 1989இல் அதனை அங்கீகரித்த 98 நாடுகளில் ஸ்ரீலங்காவும் ஒன்று!

தான் அங்கீகரித்த, ஏற்றுக்கொண்ட, அந்தச் சாசனத்துக்கு எதிராகவே, ஸ்ரீலங்கா அரசு பயங்கரவாதத்தை ஒடுக்கும் போர் என்று தனது அட்டூழியத்துக்கும் பெயரிட்டு தமிழர்களை இனச் சுத்திகரிப்புச் செய்து வருகிறது. இந்த விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுச் சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்தப்பட வேண்டும். ஸ்ரீலங்கா அரசின் முகமூடி கிழித்தெறியப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசு தமிழர்களைப் பொறுத்த வரையில் முழு அளவில் — அவர்களது சகல வகையான அடிப்படை உரிமைகளையும் பறித்து வருகிறது.

— உதயகாந்தன் —

அதனை, இனப்பாகுபாட்டைத் தடுப்பதற்கும் சிறுபான்மையினர் நலன்களைப் பாதுகாப்பதற்குமான ஐ.நா. உப ஆணைக்குழுவின் 1992 ஆகஸ்ட் மாநாட்டில் மொத்தம் 21 அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது அறிக்கையில் உறுதிப்படுத்தி இருந்தன.

அந்த மனித உரிமை மீறல்களைப் போல, மிக மோசமான தமிழர் இனச் சுத்திகரிப்பைச் சர்வதேச உலகம் கவனத்தில் எடுக்க வேண்டும். அதற்கான தரவுகளையும், சாட்சியங்களையும், சான்றா

(7 ஆம் பக்கம் பார்க்க)



(இ/6052)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Triumph ஆண்களுக்கான சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 20, செல். பீற்றரின் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (அடைக்கலம் மாதா கோவிலுக்குச் சமீபமாக) (27256)

இறைச்சிக்கோழிகள் சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் காலை 8-30—11-00 வரை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27255)

புதிய முதிரை பாலை நிலைகள், யன்னல்கள், திராந்திகள், பலகைகள் விற்பனைக்குண்டு. கு. வல்லிபுரம், இராமலிங்கம் வீதி, (முடமாவடி) திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (27272)

பால்கறந்த நிலையில் உள்ள நல்லின சனன் ஆடு ஒன்றும், 5 மாத கடாய் குட்டியுடன் விற்பனைக்கு உண்டு. பிற்பகல் 2 மணிக்கு பின்னர் வரவும். மனோன் மாஸ்ரர், அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய். (6478)

### நாய்க்குட்டிகள்

அழகிய பொமரேனியன் நாய்க்குட்டிகள் சகல தடுப்பூசிகளும் போடப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இலக்கம் 48/1, 1ஆம் ஒழுங்கை, [ஐங்கரன் விளையாட்டுக்கழக ஒழுங்கை] பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-5913)

### குளிர்பானங்கள்

Sunrise குளிர்பானங்கள், கோடியக்கள் சுத்தமானவை சுவையானவை பருகிக் களிப்படைவீர். தயாரிப்பு விநியோகம்: Siva Industries, 35/3, Colombagam Road, Chundukuli. (சி-6049)

### வியாழமாற்றம் நன்மையா

12-10-93இல் நிகழும் வியாழமாற்றம் நன்மை பயக்குமா? உலக இலங்கை பலன்கள் உட்பட 12 இராசிகளுக்குமான பலாபலன்கள். வெளியீடு: திருக்கணித நிலையம். 10/- மட்டுமே. கிடைக்கும் இடம்: வடலங்கா புத்தகசாலை, பருத்தித்துறை. (27180)

### நிம்மதி தரும் நீம்

நுளம்புத் தொல்லை. எமக்கு இல்லை. நீம் சுகாதார தூபம் புகைத்து நிம்மதியாக நித்திரை செய்வோம். இயற்கை வளம் கொண்டே தயாரானது. நீம் சுகாதார தூபம். பக்கற் ஒன்று ரூபா. 3/-. 25 பக்கற் கொண்ட ஒரு அட்டை ரூபா 60/-. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது "மிக்கவத்" (சி-5890)

### தேவை

ரியூசன் வகுப்புகள் நடத்துவதற்கு இடம் தேவை. கடித மூலம் தொடர்புகொள்ளவும்: இல. 560, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (27259)

### இலவச திருமண சேவை

30 வயது, செவ்வாயற்ற, பூசம், U.K. I.C.M.A. மணப்பெண்ணுக்கு ஏற்ற மணமகன் U.K இல் வேண்டும். சகல மணமக்களுக்கும் தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (27239)

### ஆண்டு 6 அனுமதி தேர்வு

ஆண்டு 5 மாணவருக்கு பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதித் தேர்வு 12-09-93 ஞாயிறு முற்பகல் 8-00 மணி, முற்பகல் 11-00 நடைபெறும். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27257)

### மணமக்கள் தேவை

5 அடி, 6 அங். பெண், 35 வயது, (செவ்வாய்க்குற்றமில்லை) பூராடம், அரசாங்க உத்தியோகத்தருக்கும் அவரது சகோதரன் B.Sc. 33 வயது, திருவாதிரைக்கும், தனியாகவோ, மாற்றாகவோ பெற்றோர் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (27273)

### ஆண்டு – 4 புலமைப்பரிசில்

ஆண்டு 4 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை 12-9-93 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். தொடர்பு: நாவலர் கல்விக் கழகம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (27243)

### வர்த். நிதியும் அலகு – 2

வெளிவந்து விட்டது!!! இருப்பு, களஞ்சியம், தொடர்பாடல், போக்குவரத்து, வியாபார சேர்க்கை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய உயர்தர வகுப்பிற்குரிய பாடநூல் தொகுப்பு: தேவராஜன் ஜெயராமன், B.Com (Hons), M.B.A. யாழ். பல்கலைக்கழகம். (6464)

### O/L MATHS

G.C.E. (O/L)இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களும் 26 வருட அனுபவமுடைய ஆசிரியரால் 40 மணித்தியாலத்தில் Distinction பெறு பேறடைய கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி. (6461)

### கணிதம் O/L

Distinction, Credit பெறுபேறடைய (ஆண்டு 9, 10) உட்பட இரு மாதங்களில் இதுவரையும் சித்தியடையாதோர் அனுபவமுள்ள B.Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படுவர். இல. 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (27262)

### தவறிவிட்டது

இளாலியில் 6-9-93 இரவு நீல நிற பிரயாணப் பை தவறி விட்டது. அதனுள் முக்கிய ஆவணங்கள் இருப்பதால் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். திருமதி ஜானகி சம்புலிங்கம், மே/பா த. இராமச்சந்திரன், இளைப்பாறிய ஆசிரியர், சரசாலை தெற்கு, சாவகச்சேரி. (27258)

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**ஆண்டு – 5 (1994)**

(புதிய பிரிவு)

புலமைப் பரிசில் வகுப்பு ஆரம்பமாகின்றது.

கணிதம் — நயினை S.S. பிள்ளை

தமிழ் — சுந்தரலிங்கம்

(சி-6089)

## BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்,

**A/L 94**

கலை, வர்த்தகம்

**DAY CLASS**

பொருளியல் — உதயன்

வர்த்தகம் — தேவா

கணக்கியல் — ராஜன்

அளவையியல் — S. S. மனோகரன்

தமிழ், இந்துநாகரிகம் — பாலா

புவியியல் — இக்னேசியஸ்

ஆரம்பம்: 14-09-1993

செவ். 8.00 a.m.

(சி 6075)

## ST JOHN'S COLLEGE, JAFFNA

## ஆண்டுப் பரிசளிப்பு விழா அழைப்பு

காலம்: 18 – 09 – 1993

நேரம்: காலை 9-30 மணி

இடம்: பீற்றோ ஞாபகார்த்த மண்டபம்

பிரதம அதிதிகள்:


அருட் கலாநிதி எஸ். ஜெபநேசன் (யாழ். பேராயர், தென் இந்திய திருச்சபை)

திருமதி விமலா ஜெபநேசன்

பெற்றோர், பழைய மாணவர், நண்பர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.

(சி 5918)



## எஸ்-எம்-பெர்னண்டோ

நிறுவனத்தின் ஆதரவில்

யாழ். மிட்ரவுண் றோட்டறக் கழகம் நடத்தும்

ROTARACT CLUB

"மிட்ரவுண்" கிண்ணத்திற்கான

ஆறு பேர் கொண்ட அணிகளுக்கிடையில் ஐந்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்

## தோற் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

காலம்:- **02, 03 - 10 - 1993**

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவம் பெறும் இடமும் அனுப்பும் இடமும்:-

**எஸ். எம். பெர்னாண்டோ**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


விண்ணப்பக் கட்டணம் ரூபா: 100/-

செயலாளர்,

யாழ். மிட்ரவுண் றோட்டறக் கழகம்

(சி-5919)

## 31ஆம் நினைவு நாள்



தாயின் மடியில்: 29 – 06 – 1924

இறைவன் அடியில்: 13 – 08 – 1993

அமரர்

**அருளப்பு தேவசகாயம்**

"மண்ணுலகில் நேசித்தவர்களே என்னை மரணத்திலும் நேசியுங்கள்"

எங்கள் அன்பு ஐயாவே!
அன்பு மனைவி மனம் கலங்கி
காலமெல்லாம் கண்ணீர் விட
பாசமுள்ள பிள்ளைகள் பரிதவித்திட
பரிவு மிக்க பேரப்பிள்ளைகள் பதறிட
அன்பு மிக்க மருமக்கள் வாடிட
உற்றார், உறவினர் கலங்கிட – நீ
அஸ்தமித்த சூரியனாய் மறைந்தாயே ஐயா!
31 நாளென்ன எத்தனை நாள் ஆனாலும்
இருக்கின்றாய் இதயமெல்லாம் – ஆருயிர்
ஐயா உன் ஆன்மா இறையடி சேர
கண்ணீர் பூக்கள் கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்!

குடும்பத்தினர், உறவினர்கள்.

"பெத்தானியா",
மல்வம், உடுவில்.

(27261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க கோரும் இயக்கத்தை முன்னெடுத்தால் தமிழருக்கு லாபம்

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்ற குரல் சர்வதேச அரங்கில் பலமாக ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

ஜெனிவாவில் இவ்வருடம் பெப்ரவரி மாதம் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் நாற்பத்தொன்பதாவது மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் சர்வதேச ரீதியில் இயங்கும் பதினைந்து அரச சார்பற்ற நிறுவனங்கள், ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றின.

பாக்ஸ் கிறிஸ்ரி இன்ரநாஷனல், மக்களின் விடுதலைக்கும் உரிமைக்குமான சர்வதேசக் கழகம், சகல வகையான இனப்பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேசக் கழகம், சர்வதேசக் கல்வி அபிவிருத்தி நிறுவனம், உலகத் தொழில் சம்மேளனம் ஆகிய உலகப் பிரசித்தி பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் அவற்றில் அடங்கும்.

"இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அர்த்தமுள்ள முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படுவதாயின், பிரச்சினையின் அடிப்படைக் காரணங்களை இனங்காண வேண்டும். அத்தோடு, சிங்களப் பெரும்பான்மையினர், ஒற்றையாட்சி அரசின் கீழ் பல தசாப்தங்களாக தமிழர்கள் மீது ஆழமாகவும், அகன்ற இடைவெளியை உண்டுபண்ணும் வகையிலும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டதன் விளைவாகவே, தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் நோக்குடன் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்."

"ஸ்ரீலங்காவின் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்கள், தமது அரசியல் அந்தஸ்தை தாமே சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு உரிமை உடையவர்கள் என்பதனை சர்வதேச சமுதாயம் மிக அவசரமாக அங்கீகரிக்க வேண்டிய தேவை உள்ளது." — என்பது கடந்த பெப்ரவரியில் மனித உரிமை ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் சாராம்சம்.

இந்தத் தீர்மானத்தை அனுசரித்து ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கி பது வருத்தத்துக்கு உரியது.

### பிணக்குகளின் அடிப்படைகளை உணரவேண்டும்

இலங்கையின் இனப்பிரச்சினையை சமரசமாக, சமாதானமாகத் தீர்த்துவைக்க விரும்பும் மூன்றாமவர் எவரும் (அது பிரிட்டனாக

## பிணக்கின் அடிப்படை அதுவேயன்றி போர்நிறுத்தமும் சமரசப் பேச்சுமல்ல

இருக்கலாம்; கனடா அல்லது அவுஸ்திரேலியா அல்லது ஐ.நா வாக இருக்கலாம்) தாம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இருசாராரும் உடன்பட்டு சமாதானமாக இருக்க வேண்டுமென்றே விரும்புகிறார்கள். இருசாராருக்கும் இடையிலான பிணக்குகளின் அடிப்படைகளை இல்லாதொழிப்பதிலேயே பிரச்சினைக்கான தீர்வின் வெற்றி தங்கியுள்ளது. இது மூன்றாமவர்களாக வந்து சமாதானம் செய்துவைக்க வருபவருக்குத் தெளிவாக உணர்த்தப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து அவர்களை அடையாளமற்றவர்களாக்கி விடுவதற்காகவே, அரசாங்கம் திட்டமிட்டு யுத்தத்தை நடத்துகிறது. மறுபுறத்தில் தமிழர் தாயகத்தில் சிங்களவர்களைக் குடியேற்றி, இனவிகிதாசாரத்தை மாற்றி, இலங்கை முழுவதும் சிங்களவர் தாயகமே என்ற நிலை நாட்ட முனைகிறது.

தமிழ் மக்களோ, தமது தாயகத்தில் தம்மைத் தாமே ஆண்டு சுதந்திரமாக வாழ வேண்டும் என்று விரும்புகிறார்கள். தாங்கள் இழந்த அரசையும் இறைமையையும் மீளவும் பெற்று மனிதனுக்குரிய — ஓர் இனத்துக்குரிய — இயற்கையான உரிமைகளுடன் வாழ வேண்டும் என்பதற்காகவே அவர்கள் போராடுகிறார்கள்.

இத்தகைய இரு துருவப்பட்ட, சிக்கல் நிறைந்த, பிணக்குகள் கொண்ட, இனப்பிரச்சினையை வெறுமனே யுத்தத்தை நிறுத்துவதாலும் சில சலுகைகள் அல்லது சிறு உரிமைகளை வழங்கி சமாதானத்தை உருவாக்குவதன் மூலமும் தீர்த்துவிட முடியாது.

### சுயநிர்ணய உரிமை

சிங்களவர்-தமிழர் பிணக்கின் அடிப்படையின் ஒரு பகுதியையேனும் இல்லாமற் செய்வதற்கு ஆகக் குறைந்தது தமிழர்களின் சுயநிர்ணய உரிமை நிலைப்பாட்டை உருவாக்குவதற்கு தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு உலக நாடுகளிடம் விண்ணப்பிக்க வேண்டும். ஆதரவு திரட்ட வேண்டும்.

இந்த வகையில் 1993 பெப்ரவரி ஐ.நா. ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவது அவசியம்.

தமிழர்களின் தனித் தேசத்தை சிங்களவர் தேசத்துடன் சேர்த்து ஒற்றையாட்சியை உருவாக்கிய பிரிட்டன் இது விடயத்தில் கூடிய கவ

**அரசியல்**

னம் செலுத்த வேண்டும். ஸ்ரீலங்கா அரசுக்கு ஆயுதம் விற்பதற்கு முண்டியடிக்கும் பிரிட்டன் தனக்குள்ள தார்மீகக் கடமையை மறந்துவிடக் கூடாது.

### இன ஒழிப்புக்கு தண்டனை என்ன?

இலங்கையின் வடக்கு-கிழக்கில் ஸ்ரீலங்கா அரசாங்கம் நடத்தும் யுத்தம் தமிழர்களின் உரிமைப் போரை அடக்கும் ஒன்று மட்டுமல்ல தமிழர் இன ஒழிப்புக்கான யுத்தம் என்பதையும் உலக நாடுகளுக்கு உணர்த்த வேண்டும்.

கடந்த ஐம்பது வருட காலமாக தமிழர் இனச் சுத்திகரிப்பு முயற்சிகள் நடந்து வருகின்றன. 1958 இல் அது வெளிப்படையாக இன ஒழிப்பாகக் கிளம்பியது. 1983 இல் உண்மை வடிவம் எடுத்தது.

"சிங்களக் குண்டர்கள் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட வன்செயல்கள் பற்றிய சாட்சியங்கள், அவை இன ஒழிப்பு நடவடிக்கையே என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன" என்று— 1984ஆம் ஆண்டில் "இன்ரநாஷனல் ஜூரிஸ் கொமிஷன்" என்ற நீதியியல் அமைப்புக் கூறியது.

அது தமிழர் இன ஒழிப்பின் ஆரம்பம் என்றால் இப்போது வடக்கு-கிழக்கில் யுத்தம் மூலம் தமிழர்கள் இனச்சுத்திகரிப்புச் செய்யப்படுகிறார்கள். இது குறித்து உலகத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டிய தேவையுண்டு.

ஐ.நா. சபையினால் 1948 இல் இன ஒழிப்புக்கான தண்டனையும் தடுத்தலும் என்ற சாசனம் உருவாக்கப்பட்டு 1951முதல் நடைமுறைக்கு வந்தது. 1989இல் அதனை அங்கீகரித்த 98 நாடுகளில் ஸ்ரீலங்காவும் ஒன்று!

தான் அங்கீகரித்த, ஏற்றுக்கொண்ட, அந்தச் சாசனத்துக்கு எதிராகவே, ஸ்ரீலங்கா அரசு பயங்கரவாதத்தை ஒடுக்கும் போர் என்று தனது அட்டூழியத்துக்கும் பெயரிட்டு தமிழர்களை இனச் சுத்திகரிப்புச் செய்து வருகிறது. இந்த விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுச் சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்தப்பட வேண்டும். ஸ்ரீலங்கா அரசின் முகமூடி கிழித்தெறியப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசு தமிழர்களைப் பொறுத்த வரையில் முழு அளவில் — அவர்களது சகல வகையான அடிப்படை உரிமைகளையும் பறித்து வரு

— உதயகாந்தன் —

கிறது அதனை. இனப்பாகுபாட்டைத் தடுப்பதற்கும் சிறுபான்மையினர் நலன்களைப் பாதுகாப்பதற்குமான ஐ.நா. உப ஆணைக்குழுவின் 1993 ஆகஸ்ட் மாநாட்டில் மொத்தம் 21 அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது அறிக்கையில் உறுதிப்படுத்தி இருந்தன.

அந்த மனித உரிமை மீறல்களைப் போல, மிக மோசமான தமிழர் இனச் சுத்திகரிப்பைச் சர்வதேச உலகம் கவனத்தில் எடுக்க வேண்டும். அதற்கான தரவுகளையும், சாட்சியங்களையும், சான்றா

(7 ஆம் பக்கம் பார்க்க)

## சூரியகாந்தி
### உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

கரிக்குமாறு உலகத் தமிழர் சம்மேளனம் கடந்த ஜூலை மாதம் 24ஆம் திகதி பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரிடம் கேட்டிருந்தது.

ஆனால் பிரிட்டிஷ் பிரதமரின் பதில் திருப்திகரமானதாக அமையவில்லை. ஆக்கபூர்வமானதாகவும் இல்லை. இனப்பிரச்சினையைத் தீர்ப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தைக்கு உதவுவதற்கு தாமும், தமது ஐரோப்பிய நாடுகள் அணியும் எப்போதுமே தயாராக இருப்பதாக அவர் அறிவித்திருக்கிறார். பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டியது முற்தேவை என்பதனை பிரிட்டிஷ் பிரதமர் உணரத் தவறி அங்கீகரிக்கப்பட வேண்டியது அவசியம். போரையே தனது உள்ளார்ந்தமான தீர்வாக வைத்துக் கொண்டு, வெளியில் சனநாயக, சமரச அரசியல் தீர்வு — பேச்சு — என்று வேடம் போட்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசோ, சிங்களவர்களோ தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை முதலில் சர்வதேச நாடுகள் அங்கீகரித்து, ஸ்ரீலங்கா அரசை அவ்வாறு செய்யுமாறு நெருக்குவதன் மூலமே இனப்பிரச்சினையின் அடிப்படைச் சிக்கலை நீக்க முடியும்.

ஆகையால் [illegible] தம், அரசியல் பேச்சு மூலம் தீர்வு — சமாதானம் என்ற








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகள் இணையும்

இவ்வருட இறுதிக்குள் லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைய உள்ளன.

இணைப்பு தொடர்பான பேச்சுகள் இரண்டு கட்சிகளின் தலைவர்களுக்கு இடையே கடந்த நான்கு மாதங்களாக நடைபெற்று வருவதாக லங்கா சமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்தார்.

1935 இல் லங்கா சமசமாஜக் கட்சியும், 1943 இல் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆரம்பிக்கப்பட்டன.

சித்தாந்த கருத்து வேறுபாட்டின் காரணமாக லங்கா சமசமாஜக் கட்சியில் இருந்து வெளியேறியவர்களே கம்யூனிஸ்ட் கட்சியை ஆரம்பித்தனர். (உ-எ)

# ரஜினி அரசியலுக்கு வருவாரா?

# "வள்ளி"யில் கூறுவது என்ன?

## திரைப் படப் பிரமுகர்கள் கருத்து

"பிரபல திரைப்பட நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவரா?"

இந்தக் கேள்விக்கு கடந்த மாதம் சென்னையில் நடைபெற்ற "எஜமான்" படத்தின் வெள்ளி விழாவில் பதிலளித்தார் ரஜினிகாந்த்.

"எனது சொந்தப்படமான 'வள்ளி' படத்தில் ஒரு கதாபாத்திரத்தின் மூலம் என் எண்ணத்தை வெளியிட்டிருக்கிறேன்'— என்று அப்போது சொன்னார் ரஜினி.

சில வாரங்களுக்கு முன் 'வள்ளி' படம் வெளியாகி விட்டது. அந்தப் படம் மூலம் ரஜினி சொன்ன பதில் என்ன?

சில திரைப்படப் பிரமுகர்கள் அது பற்றிக் கூறும் கருத்துகள் வருமாறு:

### ஜி. வி.

பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் ஜி. வெங்கடேஸ்வரன் (ஜி. வி.) கூறியதாவது:

'வள்ளி' படத்தில் தனது கதாபாத்திரம் மூலம் உண்மையான ஒரு கருத்தை ரஜினி வெளியிட்டுள்ளார்.

புரட்சி நடந்தால்தான் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று அவர் சொல்வதை வைத்துப் பார்த்தால் அரசியலுக்கு வந்தால் அவர் புரட்சியோடு தான் வருவார். இல்லாவிட்டால் வரமாட்டார்.

புரட்சி உருவாகி, திறமையுள்ள இளைஞர்கள் வந்தால் தான் மாற்றம் ஏற்படும் என்றும் சொல்லியுள்ளார்.

### மதி ஒளி சண்முகம்

திரைப்பட இயக்குநர் மதி ஒளி சண்முகம் கூறியதாவது:

இப்போதுள்ள அரசியல் வாதிகளின் போக்கையும் அரசியல் நிலைமையையும் தனது படத்தில் ரஜினி சாடியுள்ளார்.

இப்போதுள்ள அரசியல் கட்சிகளும் அரசியல் வாதிகளும் மக்களுக்கு உண்மையான தொண்டு எதுவும் செய்யவில்லை. இனி ஒரு புதிய சமுதாயம் உருவாக இளைஞர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார். நேரடியாகச் சொல்லாவிட்டாலும் ஒரு புதிய தலைமை தேவை என்பதை உணர்த்தியிருக்கிறார்.

அவரது ரசிகர்களைப் பொறுத்த வரையில் அந்தப் புதிய தலைவர் 'ரஜினி' என்று தான் எடுத்துக் கொள்வார்கள்.

ஒரு மாற்று அரசியல் இயக்கம் உருவாக வேண்டும் என்ற ஆசை அவர் மனத்திற்குள் இருப்பதை உணர முடிகிறது. அவரது அரசியல் பிரவேசத்திற்கு இந்தப்படம் ஓர் ஆரம்பம் என்றே கூறலாம்.

இன்னொரு மகாத்மா காந்தி பிறந்து தான் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று இந்தப் படத்தில் சொல்லியுள்ளார். அதனால் தனது கதாபாத்திரத்தை புரட்சிகரமான ஒரு பாத்திரமாக அமைத்துள்ளார். அவரே, அரசியலிலும் புரட்சிகரமான சிந்தனையுடன் வரலாம் என்ற எதிர்பார்ப்பை இது ஏற்படுத்தியுள்ளது.

'இன்றைக்கு வீடு, நாளைக்கு ஊரு, அதற்குப் பிறகு நாடு'— என்று பேசி ஊருக்கு நன்மை செய்யும் பாத்திரத்தில் வள்ளியில் வருகிறார் ரஜினி.

அவரை மக்கள் நாட்டுக்கு அழைக்கும் காலம் தொலைவிலில்லை.

### கவிஞர் வைரமுத்து

'வள்ளி' வெளியான அடுத்த நாள் ரஜினியுடன் தனியாகப் பேசிவிட்டு வந்த கவிஞர் வைரமுத்து இது பற்றிக் கூறியதாவது:

'இந்த அரசமைப்பு மீது அவருக்கு நம்பிக்கை இல்லை: இந்த அரசமைப்பால் மக்களுக்கு முழுக்க முழுக்க நன்மை செய்ய இயலாது என்பதே அவரது முழக்கம்.

இந்த அரசமைப்பை மாற்ற வேண்டும் என்ற அவரது தாகம் தெரிகிறது. அதை நான் தான் மாற்றியமைப்பேன் என்று அவர் எந்த இடத்திலும் சொல்லவில்லை. ஆனால் மாற்றியமைக்கக்கூடிய ஒரு தலைவன் தேவை என்பது அவரது வேட்கையாக இருக்கிறது. அது யாராகவும் இருக்கலாம்.

### தயாரிப்பாளர் ஆர். டி. பாஸ்கர்

"அரசியல் பற்றிய தனது கருத்தை "வள்ளி" படத்தில் ஒரு சில காட்சிகளிலேயே சொல்லியுள்ளார் ரஜினி. அவர் விரும்புகிறாரோ இல்லையோ காலமும் சூழ்நிலையும் அவரை அரசியலுக்கு இழுத்துவிடும்."— என்று கூறினார் தயாரிப்பாளர் பாஸ்கர்.

தயாரிப்பாளர் — இயக்குநர் தாணு மற்றும் சில திரையுலக பிரமுகர்களும் இதே போன்ற கருத்தைத் தெரிவித்தனர்.

★

## விவசாயிகளுக்கு மண்எண்ணெய்

தென்மராட்சி, செப். 12

பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் லீற்றர் 20 ரூபா வீதம் 25 லீற்றர் மண்எண்ணெய் வழங்கி வருகிறது. (த-117)

## கடும் வரட்சி

தென்மராட்சி, செப். 12

மிருசுவில் பகுதியில் கடும் வரட்சி நிலவுவதால் தென்னை மரங்கள் வாடிய நிலையில் காணப்படுகின்றன. (த-117)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இராமலிங்கம் மகேஸ்வரன்**

(இ. பெ. கூ. தாபனம்)

பிறப்பு: 30 - 04 - 1937

திதி: 12 - 09 - 1993

அன்புத் தெய்வமே!

உங்கள் பிரிவினால் கதிரவன் உதயம் காரிருள் போலவும், தண் நிலவு தணலாய் எரிவது போலவும் தெரிகிறதே! இன்பச் சோலைக்குள் பாடித் திரிந்த குயில்கள் மூன்று சோக கீதம் இசைப்பதுவும், அன்றிற் பறவையொன்று சிறகொடிந்து சீரழிந்து போன கதையும், அன்னையை இழந்த அன்புப் பறவைகள் ஆறு அலைப்பட்டுத் துடிப்பதுவும் உங்கள் செவிகளுக்கு எட்டவில்லையா?

ஆண்டுகள் எத்தனைதான் சென்றாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டகலாது
தங்கள் திருப்பாதங்களுக்கு எங்கள் கண்ணீர்ப்
பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

உங்கள் பிரிவால் துயறும்,
குடும்பத்தினர்.

சத்தியநாதன் வீதி,
கம்பர்மலை.

(கி-5912)

---

## 4ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
18
02
1967

மறைவு:
12
09
1989



சிரஞ்சீவி

**சிவகுருநாதன் வாசுதேவன்**

(வாசன்)

ஆண்டுகள் நான்கு கழிந்தாலும்,
உனது நினைவுகள் என்றும் அழியாது.

மட்டுவில்,
இல. 100, கண்டி வீதி,
சாவகச்சேரி.

1993-09-12

(27215)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

**பட்டப்பின் டிப்ளோமா பொது நிர்வாகம்**

**முதலாம் அரையாண்டு பரீட்சை - 1993**

மேற்படி பரீட்சை 11 - 10 - 1993 தொடக்கம் 16 - 10 - 1993 வரை நடைபெறவுள்ளது. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைப் பரீட்சைக் கிளையில் பெற்று, பூர்த்தி செய்து உதவிப் பதிவாளர் / பரீட்சைகள் அலுவலகத்தில் 25 - 09 - 1993 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 15/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பதிவாளர்.

(கி-5915)

---

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்:
18
—
01
—
1917



இறைவன் அடியில்:
04
—
09
—
1991

திருமதி

**நாகம்மா செல்வரத்தினம்**

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

திதி: 12 — 09 — 1993

விதிவரைந்த சித்திரத்தால் விலக்கப்பட்டீர்களே அம்மா
எவருக்கும் கிடைக்காத தாயாய்
ஏழேழு ஜென்மத்திலும் எட்டாதவராய்
எங்கள் மீது பாச மழை பொழிந்தீரே
நீங்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இரண்டு சென்றாலும் உங்கள்
நினைவலைகள் எங்கள் இதயத்தடாகத்தில்
அன்றலர்ந்த மலர்போல் பூத்திருக்கும்.

உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்தி அடைவதாக!

உங்கள் பிரிவால் துயருறும்:

கணவர்
(ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் - வே. செல்வரத்தினம்)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"செல்வ மஹால்",
பத்தமேனி, அச்சுவேலி.

(27814)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கலைஞன் வாழ...

கலையும் பண்பாடும் ஓர் இனத்தின் தனித்துவத்தைப் பேணும் செழுமையான மானிடச் சிறப்பு இயல்புகள்; தேசிய இனம் என்ற தகுதி சேர்க்கும் நிர்ணய அலகுகள். அத்தோடு குறிப்பிட்ட இனத்தின் சமூக வளர்ச்சியினது, நாகரிக எழுச்சியினது சின்னங்களாகவும் கலைகள் விளங்குகின்றன. ஒரு தேசத்தின், இனத்தின் வரலாற்றுப் பரிமாணங்களைப் பிரதிபலிக்கும் தன்மையும் கலைகளுக்கு உண்டு.

ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு கலையில் ஆற்றல் உள்ளவனாகவோ அன்றி ஆகக் குறைந்தது ஆர்வமுள்ளவனாகவோ இருப்பான். ஆகையால் கலைகள் சமூகத்தின் பிரிக்க முடியாத அங்கங்களும் ஆகின்றன. கலையில் உள்ள ஆற்றலும் திறமையும் ஒரு மனிதனின் ஆளுமையைச் சீர்செய்வன.

கலை மனிதனுக்குத் தெய்வீகக் கொடையாகவே அமைகிறது. ஒரு கலைஞனுக்கு உள்ள ஆற்றலும் சிறப்பியல்பும் மற்றக் கலைஞனுக்கு முற்றாக வருவதில்லை; வாய்ப்பதில்லை. அதுவே கலை ஒரு கொடை என்பதற்குப் போதுமான சான்று. தமிழர் கலைகள் தெய்வீகமானவை என்ற சிறப்பு உடையவை. இசை போன்ற கலைகள் இறைவனை இசைவிக்கும் வல்லமை கொண்டவை.

இத்தகு கலைகளில் ஒருவன் பயிற்சி பெற்றுத் தேறித் திறமை காட்டுகின்றான் என்றால் பாராட்டப்பட வேண்டியவன். கலைகள் வளர்வதற்கு கலைஞன் வளர வேண்டும். அதற்கான ஆதரவும் உதவியும், ஊக்குவிப்பும் சமூகத்திலிருந்து—மக்களிடமிருந்து—கிடைக்கவேண்டும். கலைஞனுக்கு வழங்கும் ஆதரவும் மதிப்பும் கலைகள் வளர்வதற்கு இடப்படும் வளமிகு பசளைகளாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைகளுக்கு — நுண்கலைகளுக்கு — மதிப்பளித்து பட்டப் படிப்பு வசதி செய்யவிருப்பது வரவேற்கத்தக்கதாகும். இச்செயற்பாடு கலைத்துறையின் எழுச்சிக்கும், கலைஞர்களின் மதிப்புக்கும், அந்தஸ்துக்கும், வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கலைஞர்கள் சமூகத்தினால் கீழே வைத்துப் பார்க்கப்படும் இடைக்காலச் சாபக்கேடு இப்போது பெருமளவில் நீங்கிவிட்டது. கலைஞர்களை மதிக்கவும் அவர்களைப் பெருமைப்படுத்தவும் மக்கள் பழகிக்கொண்டுவிட்டனர். எனினும் கலையையே முழுக்க முழுக்கத் தனது சீவனோபாயத்திற்கு நம்பியிருக்கும் உழைக்கும் கலைஞன், முழுநேரக் கலைஞனின் வாழ்க்கை நிலை பெரிதாக மாறவில்லை.

கலைஞர்கள் பட்டப்படிப்புக் கல்வி பெற வசதி செய்யப்படுவது போல, அவர்கள் கலையையே தொழிலாகக் கொண்டு வளமான வாழ்க்கை நடத்துவதற்கும் வாய்ப்பும் வசதியும் கிடைக்கவேண்டும்.

அதற்கான அடித்தள அமைப்பு வேலைகளைச் செய்யவேண்டியவர்கள் மக்களே. கலைஞன் ஒரு பருவகாலத்தில் சீசனில் வருவாய் தேட இருக்கும் வசதி, வருடம் முழுவதும் கிடைப்பதில்லை. கலைஞனுக்கு வருடம் முழுவதும் வருவாய் கிடைக்க ஏதுவாக சமூகத்தின் பொழுது போக்குத் துறைக் கட்டமைப்புகள் சீரமைக்கப்பட வேண்டும் இது குறித்து ஊன்றியும் ஆழமாகவும் சிந்தித்து, செயலில் இறங்குவது கலைத்துறை ஆர்வலர்களின் பணியாகும்.

# பல்கலைக் கழகங்களுக்கு கூடுதல்

# மாணவரை அனுமதிப்பதற்கு முடிவு

## நாடாளுமன்றத்தில் அமைச்சர் தகவல்

கொழும்பு, செப். 12

பல்கலைக் கழகங்களில் எல்லாப் பீடங்களுக்கும் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவிருக்கின்றது.

உயர் கல்வி அமைச்சர் திஸ்ஸ வித்த நாயக்கா கடந்த செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றத்தில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

மாணவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு சம்மதித்து உள்ளது; உபவேந்தர்களும் இதற்கு இணங்கியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

பல்கலைக் கழகங்கள் எதிர் நோக்கியுள்ள நெருக்கடி பற்றி விவரித்த அமைச்சர்.—

''வடக்கு கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த பல்கலைக் கழக மாணவர்கள் ஏனைய பல்கலைக் கழகங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பல்கலைக் கழகங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளை அரசு அதிகரித்துள்ளது. 1994 இல் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை பாதிக்கப்படமாட்டாது என்றார்.

சுதந்திரக் கட்சி எம்.பி நிமால் சிறிபால டி.சில்வா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்ட விவரங்களை வெளியிட்டார்.

''பல்கலைக் கழகங்களின் அடுத்த கல்வியாண்டில் மருத்துவ பீடங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவரின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படவுள்ளது என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மருத்துவ பீடங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவரின் எண்ணிக்கையைக் குறைக்காது, அதிகரிக்க அரசு தேவையான நடவடிக்கை எடுக்குமா? அதிக மாணவர் அனுமதிக்கப்படுவதற்கான செலவை ஈடுசெய்ய பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவுக்கு தேவையான நிதி உதவியை அரசு வழங்குமா?'' என்று நிமால் சிறிபால டி. சில்வா கேள்வி எழுப்பி இருந்தார். (இ-எ)

## மணையியல் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 12

சுகி ஷதயந் பாடசாலையின் பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி இவ்வாண்டு டிப்ளோமா பயிற்சி பெற்று வெளியேறும் மாணவிகள் வழங்கும் மணையியல் கண்காட்சி இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணி முதல் இரவு 7 மணி வரையும், நாளை திங்கள் காலை 8 மணி முதல் இரவு 7 மணிவரையும் நடைபெறும். (த)

## சிறப்பாக நடந்த பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 12

யாழ். பல்கலைக் கழகத்தின் 13 ஆவது பட்டமளிப்பு விழா — நேற்று கைலாசபதி கலையரங்கில் சிறப்புற நடைபெற்றது.

மூன்று அமர்வுகளில் நடைபெற்ற இந்த விழாவில் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தலைமை வகித்து பட்டங்களை வழங்கினார்.

யாழ். பல்கலைக் கழக அனைத்து பீடங்களின் தலைவர்கள், மற்றும் பதிவாளர்கள், துறைத் தலைவர்கள். விரிவுரையாளர்கள் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த 490 பேர் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவிடமிருந்து தமக்குரிய பட்டங்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர்.

நேற்றைய விழாவில் இருவருக்கு கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

யாழ். பல்கலைக் கழகத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறை ஆரம்பிக்கப்பட்ட பின் முதற் தடவையாக இருவருக்கு முதுமெய்யியல்மாணிப் பட்டம் வழங்கப்பட்டது.

பட்டமளிப்பு விழாவை யொட்டி இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் இன்று நடைபெறவுள்ளன. (இ-5)

## ராமராவ் மறுமணம்

புதுடில்லி, செப். 12

முன்னாள் ஆந்திர முதல் அமைச்சரும் தெலுங்கு தேசம் கட்சியின் தலைவரும் தேசிய முன்னணியின் தலைவருமான என்.ரி ராமராவ் விவாகரத்துச் செய்த ஒரு பெண்ணை இரண்டாவது முறையாக மணந்துள்ளார்.

இத் திருமணம் தெலுங்கு தேசம் கட்சியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராமராவின் முதல் மனைவி 9 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார்.

ராவுக்கு தற்போது 70 வயதாகிறது. முதலாவது திருமணம் மூலம் இவருக்கு பதினொரு பிள்ளைகள் உள்ளனர். இரண்டாவது தடவையாகத் தற்போது திருமணம் செய்த பெண் 40க்கு மேல் வயதுடைய லக்சுமி சிவாகணபதி என்று தெரிவிக்கப்படுகிறது.

## உர வகைகளுக்கு விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், செப். 12

கொழும்பில் இருந்து 'றுகுணு' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட உரவகைகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செயலகத்தில் நடந்த விவசாய இணைப்புக் குழுக் கூட்டத்தில் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படவிருக்கும் உரவகைகளின் விலை விவரம் வருமாறு:-

அமோனியம் சல்பேட் — 570 ரூபா, ரி. டீ. எம்.— 610 ரூபா' வி. ஐ. — 715 ரூபா, எப்.ஜீ.கே. — 7 0 ரூபா எம். ஓ. பி. — 695 ரூபா, ரி. எஸ், பி. — 735 ரூபா.

இந்த உரவகைகள் 50 கிலோ கொண்டவையாக பைக்கெட்டில் அடைக்கப்பட்டுள்ளன. (த-3)

## அதிரடிப்படை முகாம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 12

மட்டக்களப்பில் களுவாஞ்சிக்குடியில் உள்ள ஒத்தாச்சிமடம் என்னுமிடத்தில் அமைந்திருந்த அதிரடிப் படைமுகாம் மூடப்பட்டுள்ளது.

மூடப்பட்ட அந்த முகாமில் இருந்த தளபாடங்களைப் படையினர் மட்டக்களப்பு நகருக்கும், கோட்டைக் கல்லாறுக்கும் எடுத்துச் சென்றனர், (இ-5)

## சுய நிர்ணய உரிமையை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வணங்களையும் உலக நாடுகளுக்கு ஊட்ட வேண்டிய பெரும் பணி வெளியில் இயங்கும் தமிழர் அமைப்புகளுக்கு உண்டு.

### குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

இந்த வகையில் தமிழர் இன ஒழிப்பு தமிழர்களின் சுய நிர்ணய உரிமை ஆகியன சம்பந்தமாக உலக அரங்கில் இவ்வருடத்தில் அடுத்தடுத்து தொடர்ந்து மூன்று தடவைகள் குரல் எழுப்பப்பட்டது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

இவ்வருடம் பெப்ரவரியில் ஜெனிவாவில் நடந்த மனித உரிமைகள் ஆணைக்குழு மாநாடு, ஜூன் மாதத்தில் வியன்னாவில் நடந்த மனித உரிமைகள் பற்றிய உலக மாநாடு, ஆகஸ்ட் மாதத்தில் நடந்த இனப்பாகுபாட்டைத் தடுப்பதற்கும் சிறுபான்மையினர் நலன்களைப் பாதுகாப்பதற்குமான ஐ.நாவின் உப ஆணைக்குழுவின் மாநாடு ஆகியவற்றில் ஸ்ரீலங்கா அரசின் பிரதிநிதிகள் மூக்குடைபட்டவர்கள். ஆகஸ்ட் மாநாட்டில் இனப்பிரச்சினையில் ஐ.நா. தலையிடக் கோரும் பிரேரணை ஒன்று வரவிருந்த போதிலும் அதனை ஒருவாறு மண்டியிட்டுத் தடுத்துவிட்டனர் என்பது தெரிந்ததே.

### சோர்ந்துவிடல் ஆகாது

எனினும் எல்லாக் காலமும் எல்லா நாடுகளையும் ஏமாற்றியும், சமாளித்தும், தமிழர்களை ஒடுக்குவதற்கு ஸ்ரீலங்கா அரசை அனுமதிக்கக் கூடாது.

பிரிட்டிஷ் பிரதமர் சாதகமான பதில் தரவில்லை என்பதாலோ, நான்கு நாடுகள் ஆகஸ்ட்டில் கொண்டு வர இருந்த பிரேரணை தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலோ சோர்ந்து விடக் கூடாது?

உலக நாடுகள் எல்லாவற்றிடமும் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறும், தமிழர்களை ஸ்ரீலங்கா அரசு இனச் சுத்திகரிப்பு செய்வதை தடுக்குமாறும் — அதற்கென ஆயுதம், நிதி உதவி வழங்குவதை நிறுத்துமாறும்— தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசு உலக நாடுகளின் உதவியின்றி. தனது சொந்தக் காலில் நின்று தமிழர்களை அடிமைப்படுத்துவதோ, உரிமைப் போராட்டத்தை நசுக்குவதோ இயலாத காரியம். எனவே தமிழர்களின் உண்மை நிலையையும், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சுயநிர்ணய உரிமை போன்ற நியாயமான கோரிக்கைகளையும் வெளி உலகத்துக்கு விளக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறுவதால் தமிழர் பக்கம் லாபம் சேரும் என்பதில் சந்தேகமில்லை. தமிழர்கள் அமைக்கவிருக்கும் அரசுக்கும், நாட்டுக்கும் சர்வதேச அங்கீகாரம் தேவை, அதற்கு முன்னோடியாகவும் முதற்படியாகவும் சுயநிர்ணய உரிமை அங்கீகாரம் முன்வைக்கப்பட வேண்டும்

சிறுபான்மை இனங்கள் தமது சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் நிலைநாட்டும் புதிய யுக மறுமலர்ச்சி ஒன்று முகிழ்த்து வருகிறது. அதனைத் தக்கவாறு பயன்படுத்துவதிலேயே தமிழர் திறமையும் வெற்றியும் தங்கி உள்ளன.

> நமதடா இந்நாடு - என்றும்
> நாமிந் நாட்டின் மன்னர்
> சமம் இந்நாட்டு மக்கள் - என்றே
> தாக்கடா வெற்றி முரசை!
>
> - பாரதிதாசன் -

## மத்தியகிழக்கு...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆயுதங்கள் ஈரானில் இருந்து ஹிஸ்புல்லா இயக்கத்துக்குக் கிடைக்கின்றன.

ஹிஸ்புல்லா இயக்கத்துக்கான ஆயுத விநியோகத்தைத் தண்டிக்கவும் அதன் மூலம் ஹிஸ்புல்லா இயக்கம் இஸ்ரேல் மீதான தாக்குதல்களை நிறுத்தவும் தக்க நிலையில் இன்று சிரியா இருந்து வருகிறது. இஸ்ரேலுடனான எதிர்கால பேச்சுவார்த்தையிலும் அதற்கு இது ஒரு துரும்பாகவே கருதப்படுகிறது,

அத்துடன் வளைகுடா யுத்தத்தில் ஈராக்கிற்கு எதிராக சிரியா செயற்பட்டது அமெரிக்காவிடம் சிரியாவுக்கு நல்லெண்ணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

### முட்டுக்கட்டையை உடைக்க உதவும்

இஸ்ரேலும் - பலஸ்தீன விடுதலை இயக்கமும் ஒன்றை ஒன்று அங்கீகரித்திருப்பதும்— நாளை ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட இருப்பதும்— மத்திய கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இதுவரை இருந்து வந்த முட்டுக்கட்டையை உடைக்க உதவும்.

அதே சமயம் ஜோர்ஜ் ஹபாஸ் போன்ற தீவிரவாத இயக்கத் தலைவர்களை யாஸீர் அரபாத் எவ்வளவு தூரம் சமாளிப்பார் என்பதிலும், எதிர்கால பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேல் எவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்கும் என்பதிலுமே ஒப்பந்தத்தின் வெற்றி தங்கி இருக்கிறது.

★

## கோமாரி புறப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 12

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்துக் கொண்டு கோமாரி (குமாரி) கப்பல் நேற்றுப் பிற்பகல் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகரும் அந்தக் கப்பலில் கொழும்பு செல்கிறார். கப்பலில் 88 வெளியூர் தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்படுகின்றன. (இ-17-5)

## அரச...

1 ஆம் பக்கத் தொடர்ச்சி,

துள்ளார்.

மேற்படி பகுதிகளில் தனியார் நிலங்களாகக் கிடந்த காணிகளில் 50 வருடங்களுக்கு மேல் தமிழர்கள் குடியிருந்து' வருகின்றனர். மேலும் பல அரச காணிகள் தனிய நிலங்களாக இருக்கின்றன.

இந் நிலையில் பரம்பரையாக வாழ்ந்து வருபவர்களை வெளியேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உடன் நிறுத்த உத்தரவிட வேண்டும் என்று அவர் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். (த-9)

**ஏர் இருக்க பயம் ஏது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வுகள்

அரியாலை மத்திய சன சமூக நிலையம் அமரர் ஆலாலசுந்தரம் நினைவாக வருடம் தோறும் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகுகின்றது. இச் சுற்றுப் போட்டியின் முதலாம், இரண்டாம் சுற்று ஆட்டங்கள் 30 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்டதாக அமையும்.

இன்று காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சன சமூக "பி" அணியை எதிர்த்து கிரான்வில் வி. க. அணி மோதும்.

பிற்பகல் 1-30 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய "ஏ" அணி மானிப்பாய் பரிஷ் வி. க. அணியை எதிர்த்து மோதும்.

நாளை பிற்பகல் 1-30 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து விக்தா வி. க. அணி மோதும்.

o o o

காந்தி வீரார் விளையாட்டுக் கழகம் சுன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டரங்கில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இன்று மாலை 4 30 மணிக்கு ஞான முருகன் அணியினை எதிர்த்து கோப்பாய் கோல்ட் வீரார் அணி மோதும்.

o o o

அராலி களவத்துறை விளையாட்டுக் கழகம் வலி மேற்கிலுள்ள விளையாட்டுக் கழகங்களிடையே நடத்திவரும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகளும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணி தொடக்கம் கழக மைதானத்தில் நடைபெறும். இவ்விழாவின் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திரு. க திரவியம் கலந்து கொள்வார்.

(ட-12-161)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரன் அமராவதி

பண்ணாகத்தை சேர்ந்த திருமதி மகேஸ்வரன் அமராவதி நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற வே. மகேஸ்வரனின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும், ஸ்ரீமுருகவேள் (பண்ணாகம் கிராம அலுவலர்), அமிர்தாம்பிகை (ஆசிரியை, சுழிபுரம் கிழக்கு அ. மி. த. க. பா.), சிவநாதன் (ஆசிரியர், சங்கானை அ. மி. த. க. பா.) ஆகியோரின் அன்புத் தாயாரும், ச. சதானந்தனின் (தொழிற் பயிற்சி பரிசோதகர், கொழும்பு) அன்பு மாமியாரும், ச. கோபிகாவின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-09-93) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

தகவல்:
பிள்ளைகள், மருமகன்.

பண்ணாகம் (27279)

### அடைக்கலராக்கினி றொபேட்கிளைவ்

இளவாலையைச் சேர்ந்த திருமதி அடைக்கலராசக்கினி றொபேட்கிளைவ் நேற்று (11-09-93) காலமாகி விட்டார்.

இவர் திரு றொபேட்கிளைவின் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) அன்பு மனைவியும், மேரி இறேஸ் பாத்திமா (மணி) (ஆசிரியை கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்), மேரி லூட்ஸ் செல்வநாயகி, அருட்சகோதரி கிளாறாகிளைவ், செல்வபுத்திரன், செல்வமோகன், செல்வநேசன், காலஞ்சென்ற செல்வகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஜோண் அன்ரனி, சிறில் செல்வராசா றேணுகாதேவி, மொறீன், வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ஜெறோம், றொஸ்லின் பிரான்சிஸ் (இளைப்பாறிய ஆசிரியை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
றொபேட் கிளைவ்
(கணவன்)

17/8,
கச்சேரி நல்லூர் வீதி,
கண்டிக்குழி,
யாழ்ப்பாணம். (27280)

### திருமதி கணபதிப்பிள்ளை அன்னம்மா

கொழும்புத்துறை கிழக்கு திருமதி கணபதிப்பிள்ளை அன்னம்மா காலமானார்.

இவர் காலஞ் சென்ற கந்தையா கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் மார்க்கண்டு, கணேசு, திருமதி ருக்குமணி, காலஞ் சென்ற இரத்தினம், நடராசா (யாழ். மாநகர சபை வேலை மேற்பார்வையாளர்), பத்மநாதன், நவரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், க.கந்தசாமியின் அன்பு மாமியாருமாவார்

அன்னாரின் பூதவுடல் கொழும்புத்துறை இலக்கம் 17, இரண்டாம் குறுக்கு வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக இன்று ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.நடராசா
(மகன்)

17, இரண்டாம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை. (27277)

சோமாலி:

# அமெரிக்க கொள்கை பற்றி செனட் விளக்கம் கேட்கிறது

மொகடிஸ், செப். 12

சோமாலி சம்பந்தமான அமெரிக்க கொள்கை பற்றி விளக்கம் அளிக்குமாறு ஜனாதிபதி பில் கிளின்டனை கோரும் தீர்மானம் ஒன்றை அமெரிக்க செனட் நிறைவேற்றி உள்ளது.

சோமாலிய பொது மக்கள் அங்குள்ள ஐ. நா. படையினரால் கடந்த வியாழனன்று சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்தே செனட் சபை இந்த தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது.

சோமாலியாவில் அமெரிக்கா தலைமையிலான ஐ.நா. சமாதான நடவடிக்கைகள் கிளர்ச்சித் தலைவர் அய்டிடை கைப்பற்றும் யுத்தமாக தற்போது மாறி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ-162)

# பிரபா வழியில் போராடி தமிழீழம் பெறுவோம்

## அமெரிக்காவில் நடந்த கூட்டத்தில் உரை

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் காட்டிய வழியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடினால் தமிழீழம் அமைவது திண்ணம்.

அமெரிக்காவின் மன்ஹட்டன் நகரில் நடந்த கறுப்பு ஜூலை தின நிகழ்வில் பேசிய பலரும் மேற்கண்டவாறு கருத்துக் கூறியுள்ளனர்.

கடந்த மாதம் 24ஆம் திகதி கறுப்பு ஜூலை தினத்தை யொட்டி அங்கு ஆர்ப்பாட்டப் பேரணி, கண்காட்சி என்பன இடம் பெற்றன. தமிழர்கள் பலர் இந்த நிகழ்வுகளில் பங்கு கொண்டனர்.

அரசினால் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளைச் சித்திரிக்கும் சித்திரங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

ஆர்ப்பாட்டப் பேரணி நியூயோர்க் நகரில் உள்ள ஐ. நா சபை அலுவலகத்தில் முடிவடைந்தது. (இ-5)

# வடக்கு நோக்கி நின்றவாறு கையெழுத்திட்ட ஹமில்டன்!

கொழும்பு, செப். 12

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவியேற்ற ஜெனரல் ஹமில்டன் வனசிங்க கடந்த 8 ஆம் திகதி காலை 9. 11 மணிக்கு தனது முதலாவது உத்தியோகபூர்வ தஸ்தாவேஜு ஒன்றை கையெழுத்திட்டார்.

ஹமில்டன் அப்போது தமக்குரிய கதிரையில் அமர்ந்து இருக்கவில்லை. தமது மேசைக்கு முன்னால் வடக்கு நோக்கி நின்றவண்ணம் அந்த தஸ்தாவேஜில் அவர் கையெழுத்திட்டார்.

அரசக் கட்டுப்பாட்டிலுள்ள டெய்லி நியூஸ் பத்திரிகையின் செய்தியாளர் வடக்குப் பக்கம் பார்த்தவண்ணம் கையெழுத்திட்டது பற்றி ஹமில்டனிடம் விசாரித்தார்.

"நான் யாழ்ப்பாணத்தைப் பார்த்தபடி கையெழுத்திட்டேன் என்று நீங்கள் அர்த்தம் கொள்கிறீர்களா? ஆம் ஆனால் அது முழுவதுமாக அர்த்தப்படாது. யாழ்ப்பாணம் நாளையே வெடிக்கப் போவதில்லை"— என்று ஹமில்டன் பதில் அளித்தார்.

பின்னர் புதிதாக அமைக்கப்பட்ட பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் முதலாவது கூட்டத்திற்கு ஜெனரல் வனசிங்க தலைமை வகித்தார்.

முன்னதாக புதிய பதவியை ஏற்ற பின்னர் அமைச்சு ஊழியர்கள் மத்தியில் அவர் பேசும் போது:-

நான் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராக பதவி ஏற்றதும் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் பிடிக்கப்பட்டு விடுவார் அல்லது யாழ்ப்பாணம் 24 மணித்தியாலத்தில் வெடித்துவிடும் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது என்றார்.

(த-எ)

### சேவைக் கால பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், செப். 12

வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவைச் சேர்ந்த சுகாதார பரிசோதகர்களுக்கான சேவைக் கால பயிற்சி வகுப்புக்கள் இரண்டு கட்டங்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற உள்ளன.

நாளை திங்கட்கிழமை தொடக்கம் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு முதலாவது பிரிவிற்கும் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு இரண்டாவது பிரிவிற்கும் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். (த-162)

### ஐக்கிய தேசியக் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறார்.

ரணிலின் நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி விஜேதுங்க எதிர்ப்பு தெரிவிக்காவிடினும், தனது ஆளுமையை வளர்த்துக் கொள்வதில் மிகப் பொறுமையுடன் அவர் நடந்து வருவதாக பலரும் கருதுகின்றனர்.

இதேசமயம் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை தம்பக்கம் ஈர்த்துக் கொள்வதற்காக ஜனாதிபதி பெரும் முயற்சி செய்து வருகிறார்.

இதன் ஒரு கட்டமாக அனைத்துக் கருத்திட்ட அமைச்சர்களின் தரத்தை ராஜாங்க அமைச்சர்களின் தரத்திற்கு அவர் உயர்த்தியுள்ளார். இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் திருப்தியடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது

இதற்கிடையில் —

ஆளும் கட்சி எம். பிக்கள் இடையே கருத்து மோதல்கள் அதிகரித்து வருவதாக பரவலாக கருத்து நிலவுகிறது. நாடாளுமன்றத்தில் கூட அவர்கள் மோதிக் கொள்ளும் அளவுக்கு அவர்களிடையே வேற்றுமைகள் இருப்பதாக செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஓ.6

### ஆலயங்களில்

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று காலை 8 மணிக்கு ஏகாதசி அபிஷேகம், பூஜை, ஆஞ்சநேயர் பொங்கல் உற்சவம் ஆகியவை இடம்பெறும்.

(த-80)

# மாதம் ஒரு தடவை செய்தியாளர் மாநாடு

கொழும்பு, செப். 12

குறைந்தது மாதம் ஒரு தடவையாவது செய்தியாளர் மாநாடு நடத்தி நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் பற்றிய தகவல்களை வெளியிடுவேன்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் உயிரிழந்த படையினரின் குடும்பங்களுக்கு உதவும் விஷயத்தில் தீர்க்கமான நடவடிக்கைகளைத் தாம் எடுக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். வாரம் ஒரு தடவை நடைபெற்று வந்த செய்தியாளர் மாநாடு தற்போது நிறுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

# அரபாத்—ரபீன் வாஷிங்டன் புறப்பாடு

## நாளை ஒப்பந்தம் கைச்சாத்து

இஸ்ரேலியப் பிரதமர் யிற்ஷாக் ரபீனும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத்தும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பலஸ்தீனர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி வழங்கும் சரித்திர முக்கியத்துவம் மிக்க ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வாஷிங்டன் செல்வார்கள்.

வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் தலைமையில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள கைச்சாத்திடும் வைபவத்தில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகள் ஜிம்மி கார்ட்டரும் ஜோர்ஜ் புஷ்ஷும் பங்குபற்றவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-162-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது